இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 97 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 30 – வியாழக்கிழமை 16 நவம்பர் 2023 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:82 - Issue 97: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 30 - Thursday 16 November 2023 - Trichy ★★ 12 Pages ₹5.00

## கனமழை என அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் விரைந்து

# நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முதல்வர் உத்தரவு!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2023) சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களை காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு கனமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், கூடுதல் தலைமைச் செயலாளர் / வளர்ச்சி ஆணையர் மற்றும் முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி. அ. ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வடகிழக்குப் பருவமழை: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அவசர கால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு!

சென்னை, நவ.16–

**தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் 14.11.2023 கள ஆய்வு மேற்கொண்டு நிவாரண நடவடிக்கைகளை அமைச்சர்கள் விரைந்து மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.**

வடகிழக்கு பருவமழை 21.10. 2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

தமிழ்நாட்டில், 01.10.2023 முதல் 14.11.2023 வரை 221.0 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான மழையளவைக் காட்டிலும் 17 விழுக்காடு குறைவு ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலத்தில் 14.11.2023 முடிய,

8 மாவட்டங்களில் அதிக மழைப்பொழிவும், 8 மாவட்டங்களில் இயல்பான மழைப்பொழிவும், 22 மாவட்டங்களில் குறைவான மழைப்பொழிவும், ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் வடகிழக்குப் பருவமழைக்கென மேற்கொள்ளப் பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கடந்த 19.09.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தி, அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 13.11.2023ம் நாளிட்ட அறிவிக்கையில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை மற்றும் மிக கனமழை ஏற்பட கூடுமென்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

● **கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள 27 மாவட்டங்களில் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு 13.11.2023 அன்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.**

● **கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு அமைச்சர் பெருமக்களை அனுப்பி வைக்க தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.**

● **திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 13 மாவட்டங்களின் நியமிக்கப்பட்டுள்ள மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் கண்காணிப்பு அலுவலர்களாக தொடர்புடைய மாவட்டங்களுக்கு விரைந்து சென்று முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.**

● **மாநில / மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசிகளுடனும், கூடுதலான அலுவலர்களுடனும் இயங்கி வருகின்றன.**

● **பொதுமக்கள், Whatsapp எண்.94458 69848 மூலம் புகார்களை பதிவு செய்யலாம்.**

முதலமைச்சர் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திலிருந்து கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களை காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு கனமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் இந்திய வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்தர் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கனமழை தொடர்பான எச்சரிக்கை குறித்து கேட்டறிந்தார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களை காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு கனமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது ஆய்வின் போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், கூடுதல் தலைமைச் செயலாளர் / வளர்ச்சி ஆணையர் மற்றும் முதலமைச்சரின் செயலர் எம். முருகானந்தம், மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்கு நர், சி.அ.ராமன் ஆகிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## கூர்நோக்கு இல்லங்களின் செயல்பாடுகள்: குழந்தைகளின் நலனுக்கான பணியை ஏற்று அறிக்கை அளித்த

# நீதியரசர் சந்துரு அவர்களுக்கு - எனது நெஞ்சார்ந்த நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவு!

சென்னை, நவ.16 –

கூர்நோக்கு இல்லங்களின் செயல்பாடு, நிர்வாகத் திறனை மேம்படுத்த - மதிப்பூதியம் ஏதும் பெற்றுக் கொள்ளாமல் அறிக்கை அளித்த நீதியரசர் சந்துரு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி! - என, சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

**கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாட்டினையும் நிர்வாகத் திறனையும் மேம்படுத்துவதற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சந்துரு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் அறிக்கையினைக் குழந்தைகள் நாளான இன்று பெற்றுக்கொண்டேன்.**

**சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை அதிகாரிகளோடு கலந்தாய்வு செய்து, இந்த அறிக்கையின் பரிந்துரைகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.**

**மதிப்பூதியம் ஏதும் பெற்றுக்கொள்ளாமல் குழந்தைகளின் நலனுக்கான இப்பணியை ஏற்றுக் கொண்டு அறிக்கை அளித்த நீதியரசர் சந்துரு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## வடகிழக்குப் பருவமழை தீவிரம்!

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் விரைந்து ஈடுபடுவீர்!

## ஆய்வுக் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வலியுறுத்தல்!

*சென்னை, நவ. 16 -*

*தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது - பல்வேறு மாவட்டங்களில் கனமழை முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு செய்தார்.*

*வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டில், 01.10.2023 முதல் 13.11.2023 வரை 221.7 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான மழையளவைக் காட்டிலும் 17 விழுக்காடு குறைவு ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலத்தில் 13.11.2023 முடிய, 8 மாவட்டங்களில் அதிக மழைப்பொழிவும், 7 மாவட்டங்களில் இயல்பான மழைப்பொழிவும், 23 மாவட்டங்களில் குறைவான மழைப்பொழிவும், ஏற்பட்டுள்ளது.*

*நேற்று முன்தினம் (14.11.2023) காலை 8.30 மணி வரை 35 மாவட்டங்களில் 13.25 மி.மீ. மழை பெய்துள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் அதிக பட்சமாக 11.3 செ.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.*

*5 இடங்களில் மிக கனமழையும், 30 இடங்களில் கனமழையும் பதிவாகியுள்ளது.*

*முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.09.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தி, வடகிழக்குப் பருவமழைக்கென மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.*

*இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 13.11.2023ம் நாளிட்ட அறிவிக்கையில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை மற்றும் மிக கனமழை ஏற்பட கூடுமென்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் பின் வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள 27 மாவட்டங்களில் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் 13.11.2023 நாளிட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக, அரியலூர், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 7 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாலை மாவட்டத்தில் பள்ளிகளுக்கும், திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் வட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வ கோட்டை மற்றும் கரம்பக்குடி ஆகிய இரு வட்டங்களிலும் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், 13.11.2023 மற்றும் 14.11.2023 நாட்களில் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும், இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று*

தொடர்ச்சி 3ஆம் பக்கம்



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 16-11-2023

# ஆளுநர்கள் தலையில் இடி - 2

தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி, முகுல் ரோத்தகி, பி.வில்சன் ஆகியோர் வலிமையான வாதங்களை எடுத்து வைத்தார்கள்.

**“கன்னியாகுமரியில் தொடங்கி காஷ்மீர் வரை எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் அரசியல் சாசன நெறி முறைகளுக்கு எதிரான செயல்களை செய்து வருகிறார்கள். இது ஆளுநர்களுக்கு பிடித்த நோய் போல உள்ளது. தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் இதே வகையான பிரச்சினைகளுடன் உச்சநீதி மன்றத்தை அணுக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றிய மசோதாக்கள் மற்றும் அரசின் தீர்மானங்களுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் கொடுக்காமல் ஆளுநர் கிடப்பில் போடுவதால் அரசுப் பணிகள் முடங்குகிறது. டி.என்.பி.எஸ்.சி. தலைவர் நியமனம் தொடர்பான கோப்புகள் கூட ஆளுநரிடம் முடங்கிக் கிடக்கிறது. ஆணையத் தலைவர் உள்ளிட்ட 14 உறுப்பினர் பதவிகளில் 10 பணியிடங்களை நிரப்ப முடியவில்லை . டி.என்.பி.எஸ்.சி. தலைவர் உள்ளிட்ட அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முழு அதிகாரம் இல்லாமல் அரசு ஆட் சேர்ப்பு செய்ய முடியாது”** என்ற வாதங்களை அரசு சார்பில் வழக்கறிஞர்கள் வைத்தார்கள்.

**“மாநில அரசுக்கு எதிராக ஆளுநர் செயல்பட அரசியலமைப்பு அனுமதிக்கவில்லை. அரசியலமைப்பின் பிரிவு 200, மசோதாக்களை ‘கூடிய விரைவில்’ கையாள வேண்டும் என்று கோருகிறது. ஆனால், As soon as possible என்ற வாக்கியத்தை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தவறாக புரிந்து கொண்டு தவறாக செயல்படுகிறார். அரசியல் சாசன பிரிவுகள் 200 மற்றும் 163 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி வருகிறார். ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசியல் சாசனத்திற்கு எதிராகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதால் அவர் செயல் இழந்து விட்டார்” என தமிழ்நாடு அரசின் சார்பில் வாதங்கள் வைக்கப்பட்டது.**

மசோதாக்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைக் கையாளும் போது உச்சநீதிமன்றத்தால் ஆளுநர்களுக்கு நிர்ணயிக்கப்பட வேண்டிய காலக்கெடு குறித்து பரிசீலிக்கக்கூடிய 5 சட்ட முன்மொழிவுகளை தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வழங்கினார். அரசியலமைப்பின் 91வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவருக்கு நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பு 6 வாரங்கள் என்றும் அது ஆளுநர்களுக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதிட்டது. இந்த வாதங்களையும் கேட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், மிகக்கடுமையாக ஆளுநரை விமர்சித்துள்ளார்கள்.

**“அரசியல் சாசனம் 200வது பிரிவின் கீழ், சட்டப் பேரவையில் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட உடன், உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் ஆளுநரின் செயல்பாடுகள் தாமதமாகி, மசோதாக்கள் கிடப்பில் உள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் மிக முக்கியமானவை. சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட முடியாது. அரசியலமைப்புச் சட்டப்படி மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும். இதைத்தான் செய்ய வேண்டும். ஆனால் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடு மிகவும் கவலையளிக்கிறது”** என்று நீதிபதிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் மற்றும் ஒன்றிய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்பவும், ஒன்றிய அரசு தரப்பில் அட்டர்னி ஜெனரல் ஆஜராகவும் உத்தரவிட்டது உச்சநீதிமன்றம்.

தமிழ்நாடு தொடர்ந்த வழக்கில் ஆளுநர் ரவி எப்படி குட்டுப்பட்டாரோ அதேபோல, பஞ்சாப் மாநில அரசு தொடர்ந்த வழக்கில் அந்த மாநில ஆளுநர் பன்வாரிலால் புரோகித் குட்டுப்பட்டுள்ளார்.

**“சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பிவைக்கப்படும் மசோதாக்களை கிடப்பில் போடும் ஆளுநர்களின் செயல் ஜனநாயகத்துக்கு ஆபத்தானது. மசோதாக்களை எத்தனை நாட்களுக்குத்தான் ஆளுநர் இப்படி கிடப்பில் போட்டிருப்பார்? ஆளுநர் தீயுடன் விளையாடுகிறார். சட்டமன்றம் கூட்டப்பட்ட முறை சரியல்ல என்று கூறி மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று ஆளுநர் எப்படி கூறமுடியும்? மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்றத்தின் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று எப்படி கூறமுடியும்? இது மிகவும் கவலை அளிக்கும் விவகாரம். நாம் நாடாளுமன்ற ஜனநாயகத்தைத்தான் தொடர்கிறோமா? சபாநாயகர் சட்டமன்றத்தை கூட்டியது தவறு என்று எப்படி சொல்ல முடியும்? எந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஆளுநர் அப்படி கூறினார்? சட்டமன்றம் கூட்டப்பட்டது சரியல்ல என்று கூறி 4 மசோதாக்களை நிலுவையில் வைத்திருக்க முடியாது; இதுபோன்ற அதிகாரங்களை ஆளுநர்கள் கையில் எடுக்க முடியாது; இது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது. ஆளுநர்களுக்கு சில அதிகாரங்கள் உள்ளன அதற்காக மசோதாக்களை கிடப்பில் போட முடியாது”** என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் நெத்தியடி அடித்துள்ளார்கள்.

**“மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கே அதிக அதிகாரம் உள்ளது. மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குபவராக ஆளுநர் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசியல் சாசனம் இயற்றப்பட்டுள்ளது. ஆளுநருக்கான அதிகாரம் என்ன என்பதை முந்தைய தீர்ப்புகள் உறுதி செய்துள்ளன”** என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

பிரெஞ்சு தேசத்தில் பதினான்காம் லூயி நினைத்ததைப் போல, ‘I AM THE STATE’ என்று நினைத்துக் கொள்ளும் ஆளுநர் ரவி உள்ளிட்ட அதிகப்பிரசங்கிகளுக்கு தலையில் இடியாய் இறங்கி இருக்கிறது உச்சநீதிமன்றம்.

••




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (14.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் (பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் உடனிருந்தனர்.

### நீதியரசர் கே.சந்துரு தலைமையிலான

# கூர்நோக்கு இல்ல மேம்பாடு குறித்த ஒரு நபர் குழு அறிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பிப்பு!

**சென்னை, நவ. 16 -**

**கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் சமர்ப்பித்தது.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (14.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டுவரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத்திறன் களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்கள் தலைமையில் ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப்பணி அதிகாரி மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் சார்பாக ஒரு பிரதிநிதியும் உள்ளடக்கிய உயர்மட்டக்குழு ஒன்று உருவாக்கப்படும் என்று 6.2.2023 அன்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும்விதமாக, கடந்த 11.04.2023 அன்று இளைஞர் நீதி அமைப்பின்கீழ் செயல்பட்டு வரும் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, சென்னை உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து அரசு ஆணையிட்டது.

அதன்படி, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவானது கடந்த 2.5.2023 முதல் பொறுப்பேற்றதுடன் கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன்களை மேம்படுத்த ஏதுவாக பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்பட்டது. அதோடு மட்டுமல்லாது மேற்படி ஒரு நபர் குழுவானது மாநிலத்தில் செயல்பட்டு வரும் அனைத்து கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை நேரடியாக ஆய்வு மேற்கொண்டது.

அதனைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவானது, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் மற்றும் நீதியரசரின் ஆய்வின் அடிப்படையில் முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டு, நேற்று முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலத்துறை ஆணையர் (பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு அவர்களின் மகள் சக்தி ஆகியோர் உடனிருந்தனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரியலூர் மாவட்டத்தில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு உரிமைத் தொகைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

*அரியலூர், நவ, 16-*

*அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி இராஜ பாண்டியன் திருமண மண்டபத்தில் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்” இரண்டாம் கட்டமாக பயனாளிகளுக்கு உரிமைத் தொகையினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் தகுதிவாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற சிறப்புமிக்க இத்திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், மேலும், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் தொடங்கிவைத்தார். அதனை தொடர்ந்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விடுபட்டவர்களுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவர்களில் தகுதி வாய்ந்த மகளிருக்கு சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரிமைத் தொகைகளை வழங்கினார்.*

*அதன்படி அரியலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் முதல்கட்டமாக செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் அன்று துவக்கி வைக்கப்பட்டு 1,51,038 எண்ணிக்கையிலான மகளிர் மாதந்தோறும் ரூ.1000 உரிமைத் தொகை பெறுகின்றனர். இதில் அரியலூர் வட்டத்தைச் சேர்ந்த 51,893 மகளிரும், ஜெயங்கொண்டம் வட்டத்தைச் சேர்ந்த 53,726 மகளிரும், செந்துறை வட்டத்தைச் சேர்ந்த 22,484 மகளிரும், ஆண்டிமடம் வட்டத்தைச் சேர்ந்த 22,935 மகளிரும் பயன்பெற்று வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக நேற்றையதினம் வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி ராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக 6,217 மகளிருக்கு உரிமைத்தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.*

*இதில் அரியலூர் வட்டத்தைச் சேர்ந்த 1,830 மகளிரும், ஜெயங்கொண்டம் வட்டத்தைச் சேர்ந்த 2,279 மகளிரும், செந்துறை வட்டத்தைச் சேர்ந்த 1,059 மகளிரும், ஆண்டிமடம் வட்டத்தைச் சேர்ந்த 1,049 மகளிரும் பயன்பெற உள்ளனர்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, வருவாய் கோட்டாட்சியர்கள் ராமகிருஷ்ணன் (அரியலூர்), பரிமளம் (உடையார் பாளையம்), மாவட்ட நிலை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*



சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (14.11.2023) வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஏ.கே.அருண் கபிலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல்மங்கை, எம்.எல்.ஏ ஆர்.ராஜேந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ.எஸ்.ஆர்.சிவலிங்கம், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி மற்றும் பேரூராட்சி தலைவர், துணை தலைவர் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2023) சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததையொட்டி மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், கூடுதல் தலைமைச் செயலாளர் / வளர்ச்சி ஆணையர் மற்றும் முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.அ. ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் தொழில்பேட்டையில் செயல்பட்டு வரும் தொழிற்சாலையில் இயங்கும் பூஜ்ஜிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யப்பன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர்/செயலர் கண்ணன், இணை தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் மலையாண்டி, ஈரோடு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் சதீஷ் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தகைசால் தமிழர் – பொதுவுடைமைப் போராளி

# மார்க்சிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் என்.சங்கரய்யா மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி!

**சென்னை, நவ. 16-**

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த முதுபெரும் தலைவரும் தமிழக அரசின் தகைசால் தமிழர் விருது பெற்றவருமான என்.சங்கரய்யா அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.. அவருக்கு வயது 102.**

**இச்செய்தி அறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று என்.சங்கரய்யா அவர்கள் உடல் மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.**



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான என்.சங்கரய்யா அவர்கள் சென்னை குரோம்பேட்டை நியூ காலனியில் வசித்து வந்தார். அவருக்கு சளி தொந்தரவு, காய்ச்சல் காரணமாக ஆக்சிஜன் குறைவு ஏற்பட்டதால் சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவரது உயிர் நேற்று (நவ.15) பிரிந்தது.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று என்.சங்கரய்யா அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் சுதந்திரப் போராட்ட வீரருமான சங்கரய்யா அவர்களின் மறைவு தமிழ்நாட்டு அரசியலில் பெரும் இழப்பாகும் என்று பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்ததுடன் நேரில் சென்றும் சங்கரய்யா அவர்களின் உடல் மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

**என்.சங்கரய்யா வாழ்க்கை வரலாறு!**

சுதந்திரப் போராட்ட வீரரும் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவருமான என்.சங்கரய்யா கோவில்பட்டியில் (1922)ஆம் ஆண்டு பிறந்தார். தூத்துக்குடியில் உள்ள தனது தாத்தா வீட்டில் தங்கி, அங்குள்ள அரசு ஆரம்பப் பள்ளியில் பயின்றார். பாரதியார் கவிதை கள் இவருக்கு பெரும் உந்துசக்தியாக விளங்கின. புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை உள்ளிட்ட சங்ககால இலக்கியங்களையும் ஆழ்ந்து கற்றார்.

பள்ளிக் கல்வி முடிந்த பிறகு, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் வரலாறு பாடத்தில் சேர்ந்தார். அங்கு பரிமேலழகர் தமிழ்க் கழகத்தின் இணைச் செயலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம்மன்றத்துக்கு ராஜாஜி, சத்தியமூர்த்தி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் உள்ளிட்ட பல தலைவர்களை அழைத்துவந்து பேச வைத்தார். மாணவப் பருவத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து பல போராட்டங்களிலும் பங்கேற்றார்.

ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்து கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைதானார். கல்லூரிப் படிப்பும் முடிவுக்கு வந்தது. மகன் வழக்கறிஞராக வேண்டும் என்ற இவரது தந்தையின் ஆசையும் நிறைவேறவில்லை.

சிறையில் பெருந்தலைவர் காமராஜர், பொதுவுடைமைவாதி ப.ஜீவானந்தம், எம்.ஆர்.வெங்கட்ராமன் உள்ளிட்ட பல தலைவர்களைச் சந்தித்தார். விடுதலையாகி வெளியே வந்த பிறகு, பொது வாழ்க்கைக்குத் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொண்டார். நேதாஜி 1939ல் மதுரை வந்தபோது மாணவர் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து, அதில் நேதாஜியை உரையாட வைத்தார்.

‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டத் தலைவர்களை விடுதலை செய்யக் கோரி மாணவர்களைத் திரட்டிப் போராட்டம் நடத்தினார். போலீஸாரின் தடியடிகள், தலைமறைவு வாழ்க்கை, சிறைத் தண்டனை என போராட்ட வாழ்க்கை நடத்தினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உருவானபோது அதன் முக்கியத் தலைவர்களுள் ஒருவராக இருந்தார். 1938ல் சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் ‘சென்னை மாணவர் சங்கம்’ என அமைத்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். இதேபோல மதுரையிலும் மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டு, அதன் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழிலாளர் நலனுக்காக ஏராளமான பொதுக்கூட்டங்கள், மாநாடுகளை நடத்தியதோடு களப்பணிகளிலும் துடிப்புடன் ஈடுபட்டார். பல்வேறு இதழ்களில் தனது கருத்துகளைக் கட்டுரைகளாக எழுதி வந்தார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தொடங்கப்படுவதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கியவர். ‘ஜனசக்தி’ இதழில் 3 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1967, 1977, 1980 ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், மொத்தம் 11 ஆண்டுகள் உறுப்பினராகச் செயல்பட்டுள்ளார். சட்டப்பேரவையில் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான உரைகளை ஆற்றியுள்ளார்,

எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார், கதராடையே அணிந்து வருபவர். கம்யூனிஸ்ட் கட்சியில் பல பொறுப்புகளை வகித்து, அவற்றில் திறம்பட செயலாற்றி ஓய்வுபெற்ற பின்னரும் கூட, கட்சி அலுவலகத்துக்கு வருவது, ஆலோசனைகள் வழங்குவது உள்ளிட்ட பணிகளைச் செய்து வந்தார்.

70 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுவாழ்வில் மாணவராக, கட்சித்தலைவராக, சட்டப்பேரவை உறுப்பினராக, விவசாய சங்க மாநில, அகில இந்தியத் தலைவராக பல சேவைகளையாற்றி வருபவரும், சுதந்திரப் போராட்ட வீரர், ‘உழைக்கும் மக்களின் தோழர்’ எனப் போற்றப்படும் என்.சங்கரய்யா அவர்கள் நேற்று (15.11.2023) காலை சிகிச்சை பலனின்றி மறைவுற்றார்.

**தகைசால் தமிழர் விருது முதல்வர் வழங்கி கௌரவித்தார்!**

தமிழ்நாட்டில் 2021ல் தி.மு.க. அரசு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்ததும் தமிழ்நாட்டுக்கும் தமிழினத்துக்கும் மாபெரும் பங்காற்றியவர்களை சிறப்பிக்க ‘தகைசால் தமிழர் விருது’ உருவாக்கப்பட்டது.

இந்த தகைசால் தமிழர் விருது முதன் முதலாக முதுபெரும் இடதுசாரித் தலைவர் என். சங்கரய்யா அவர்களுக்கு வழங்கப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 ஆம் ஆண்டு அறிவித்தார்.

அதோடுமட்டுமல்ல இந்த தகைசால் தமிழர் விருதை சங்கரய்யா அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று வழங்கினார்.

அப்போது விருதுக்கான ரூ.10 லட்சம் காசோலையும் சங்கரய்யா அவர்களிடம் முதல்வர் அவர்கள் வழங்கினார்.


ஆனால் விருதாக தாம் பெற்ற ரூ.10 லட்சம் காசோலையை தமிழ்நாடு அரசின் கொரோனா நிவாரண நிதிக்கே திரும்பி வழங்கி ‘தகைசால் தமிழர்’ என்ற விருதுக்கும் பெருமைச் சேர்த்தார் தியாகி சங்கரய்யா அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, நவ. 16 -

இந்திய நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான குழந்தைகள் தினத்தையொட்டி, நேரு அவர்களின் பொன்மொழியை குறிப்பிட்டு முதலமைச்சர் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**இன்றைய குழந்தைகள்தான் நாளைய இந்தியாவை உருவாக்குவார்கள். நாம் அவர்களை வளர்க்கும் விதம்தான் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வலியுறுத்தல்!

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், இந்த தகவலை ஆழ்கடலில் உள்ள மீனவர்களுக்கும், கரையில் உள்ள மீனவர்களுக்கும் தெரிவிக்குமாறு மீன்வளத்துறை ஆணையர் மற்றும் கடலோர மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய மாவட்டங்களுக்கு விரைந்து சென்று முன்னெச்ச ரிக்கை மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாநில / மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசிகளுடனும், கூடுதலான அலுவலர்களுடனும் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள், Whatsapp எண்.94458 69848 மூலம் புகார்களை பதிவு செய்யலாம்.

424 கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள முன் எச்சரிக்கை அமைப்புகள் மூலம் சைரன் ஒலி, நேரடி ஒளிபரப்பு மூலம் எச்சரிக்கைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட எச்சரிக்கை செய்திகள் பரப்பப்படுகின்றன.

பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் பொதுமக்களுக்கு புயல், வெள்ள அபாய எச்சரிக்கை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

TNSMART செயலி மூலமாக வும், அச்சு, மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் வானிலை முன்னறிவிப்பு, வெள்ள அபாய எச்சரிக்கை மற்றும் மின்னல் எச்சரிக்கை வழங்கப்படுகிறது.

கடலோர மாவட்டங்களில் 1.13 இலட்சம் நபர்கள் தங்கும் வகையில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

பள்ளிகள், கல்லூரிகள், சமூகக் கூடங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் என மொத்தம் 4967 நிவாரண முகாம்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியை பொறுத்தமட்டில் 169 நிவாரண முகாம்கள் உள்ளதோடு, மழைநீரை வெளியேற்ற 260 பம்புகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பேரிடர் காலங்களில் தேடல், மீட்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு முன்னெச்ச ரிக்கை நடவடிக்கையாக திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பழனி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 400 வீரர்கள் கொண்ட 12 குழுக்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையின் 200 நபர்கள் அரக்கோணம் மற்றும் சென்னையில் தயார் நிலையில் உள்ளனர்.

பாதிப்பிற்குள்ளாகும் மக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும், நிவாரண முகாம்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி, மின்சாரம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும்;

மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு மற்றும் சேதமடைந்த குடிசை/வீடுகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வின் போது கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர், சி.அ. ராமன் ஆகிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை நகராட்சி, அண்ணாசிலை பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, “முத்தமிழ்த்தேர்” என்ற அலங்கார ஊர்தி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோரால், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 13.11.2023 அன்று வரவேற்று காட்சிப்படுத்தப்பட்டு, முத்தமிழ்த்தேரின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிதைப்பித்தன், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஆத்தூர் தொகுதியில் கூட்டுறவுத் துறை சார்பாக நடத்தப்படும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாண வர்களுக்கு பருவத்தேர்வு கல்வி கட்டணத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மையம் கூட்டரங்கில் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மனுக்களைப் பெற்று குறைகளை கேட்டறிந்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், மேயர் மகாலட்சுமி யுவராஜ் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டை 1 இலட்சம் கோடி டாலர் பொருளாதாரமாக மாற்றும் நோக்குடன்

# 70 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

## சிவகங்கையில் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கொடியேற்றித் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ 16-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்நாட்டை ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரமாக மாற்றும் நோக்குடன், 70 ஆவது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா "ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு" என்ற கருப்பொருளுடன் கொடியேற்றத்துடன் துவங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 70 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவின் தொடக்க நாளான நேற்று (14.11.2023) சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஒருங்கிணைந்த வளாகத்தில் உள்ள மண்டல இணைப்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஏழு வண்ணங்களை உள்ளடக்கிய கூட்டுறவுக் கொடியினை ஏற்றி வைத்துப் பணியாளர்கள் ஊடே உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து நேற்று (14.11.2023) சென்னையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய வளாகத்தில். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே. கோபால், தலைமையேற்று, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் முன்னிலையில் ஏழு வண்ணங்களை உள்ளடக்கிய கூட்டுறவுக் கொடியினை ஏற்றி வைத்துக் கூட்டுறவு வாரவிழாவிற்கான உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

மக்களுக்காக, மக்களால் உருவாக்கப்பட்டு இலாப நோக்கமின்றிச் சேவை மனப்பான்மையோடு செயல்படும் இயக்கம் கூட்டுறவு இயக்கம். இவ்வியக்கமானது, ஏழை எளிய, நலிவுற்ற மக்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் வகையில், கைத்தறி மற்றும் துணிநூல், பால்வளம், பட்டு வளர்ச்சி, மீன்வளம், காதி, கதர் கிராமியம், கால்நடை பராமரிப்பு, தொழில் மற்றும் வணிகம், சமூகநலம், வேளாண்மை, ஊரக வளர்ச்சி, வீட்டுவசதி, சர்க்கரை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்காக பெரும்பங்காற்றி வருகின்றது.

மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் தொடக்க வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் முதல் மாவட்ட மற்றும் மாநில அளவிலான 22,000-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், அனைத்து வகை மக்களும் எளிதில் அணுகும் வகையில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி சிறப்பாகச் செயல்பட்டுவருகின்றன.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற பாட்டுக்கொரு புலவன் பாரதியின் எண்ணத்தை ஈடேறச் செய்து வருகிறது கூட்டுறவியக்கம். மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட்டு, மனித இனத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு மகத்தான "மக்கள் இயக்கமாகிய கூட்டுறவு இயக்கத்தில் இணைந்துள்ளோர் நன்மைகளையும், கூட்டுறவு இயக்கம் ஏற்படுத்தியுள்ள சாதனைகளையும், கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றி வருகின்ற பணிகளையும் மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்து, மக்கள் அனைவரும் கூட்டுறவில் இணைந்து பயன் பெற வேண்டும் என்ற வகையில், ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு வார விழா கொண்டாடப்படுகிறது.

ஆண்டுதோறும் முன்னாள் பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் திங்கள் 14ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை நாடு முழுவதும் புதுடில்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு ஒன்றியத்தின் வழிகாட்டுதலின்படி, கூட்டுறவு வாரவிழா கொண்டாடப்படுகிறது.

அவ்வகையில் இவ்வாண்டும் 70வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா2023 "ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் மற்றும் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு 14.11.2023 அன்று "கூட்டுறவு அமைப்புகளின் தற்போதைய வளர்ச்சி" என்ற தலைப்பிலும், 15.11.2023 அன்று "கடன் சாராக் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அனைவருக்குமான உள்ளடக்கிய நிதியம்" என்ற தலைப்பிலும், 16.11.2023 அன்று "கூட்டுறவு அமைப்புகளைக் கணினிமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்" என்ற தலைப்பிலும் 17.11.2023 அன்று "கூட்டுறவு அமைப்புகளைப் பரவலாக்குதல் மற்றும் எளிமைப்படுத்துதல்" என்ற தலைப்பிலும், 18.11.2023 அன்று "அரசு மற்றும் தனியார் கூட்டுறவுப் பங்களிப்பு" என்ற தலைப்பிலும், 19.11.2023 அன்று "இளைஞர்கள், பெண்கள், விளிம்பு நிலை மக்களுக்கான கூட்டுறவு அமைப்புகள்" என்ற தலைப்பிலும், மற்றும் நிறைவு நாளான 20.11.2023 அன்று "கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியைச் சீரமைத்தல்" என்ற தலைப்பிலும் அனுசரிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் கொண்டாடப்படவுள்ளது.

மேலும், மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விழாக்களில் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வு, கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பொது மக்களுக்கு ஏற்படும் நற்பயன்கள் தெரியப்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி, இரத்ததான முகாம், மரக்கன்றுகள் நடுதல், பள்ளி/கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நடத்துதல். கூட்டுறவாளர்களைக் கௌரவித்தல் உள்ளிட்ட பலதரப்பட்ட நலத்திட்டப் பணிகள் மற்றும் நிகழ்ச்சிகளை அனைத்து வகை கூட்டுறவு அமைப்புகள் ஒருங்கிணைந்து நடத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்புகள் மிகவும் சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்கப்படும்.

மேலும் 20.11.2023 அன்று, புதுக்கோட்டையில் நடைபெறும் மாநில அளவிலான கூட்டுறவு வார விழாவின் நிறைவு விழாவில் 2022 2023ஆம் நிதியாண்டில் சிறப்பாகச் செயல்பட்ட பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாராட்டுக் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

சென்னையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கூடுதல் பதிவாளர்கள் ச.சுப்பிரமணியன், சிவ.முத்துக்குமாரசுவாமி, திருமதி ஆர்.பிருந்தா, திருமதி.என். மிருணாளினி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக உயர் அலுவலர்கள்/பணியாளர்கள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலர்கள்/பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

### நவம்பர் 25 - 26 ஆகிய இரு நாட்கள் நடைபெறும் முகாம்களில்

# புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் முக்கியப் பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர்!

## காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, நவ. 16-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில், திருத்தப்பட்ட புதிய அட்டவணைப்படி, வருகிற 25, 26 ஆகிய இரு தேதிகளில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு முகாமில், புதிய வாக்காளர்களை சேர்க்கும் முக்கிய பணியில் வார்டு - கிளைக் கழக செயலாளர்கள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் அனைவரும் இணைந்து, அவரவர் பாகங்களில் புதிய வாக்காளர்களை சேர்க்கும் இன்றியமையா பணியில் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்று மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

இந்திய தேர்தல் ஆணையம் 1.1.2024-ஆம் தேதியை தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர் பட்டியலை திருத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்காக வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 27-ஆம் தேதி வெளியிடப்பட்டது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட அன்றைய தினமே வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகளும் தொடங்கின.

அந்தந்த ஒன்றிய - நகர - பேரூர் - பகுதி செயலாளர்களிடம் வழங்கப்பட்ட வாக்காளர் பட்டியலை பிரித்து, வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அந்த பாகத்தில் உள்ள தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழகத்தினருடன் இணைந்து வீடு வீடாகச் சென்று உடனடியாக வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் முக்கிய பணியில் அனைவரும் ஈடுபட்டார்கள்.

அக்டோபர் 27-ஆம் தேதி முதல் டிசம்பர் 12-ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் - இடம் மாறிய வாக்காளர்கள் பெயர்களை சேர்த்தல், இறந்த - இடம் மாறிய வாக்காளர்கள் பெயரை நீக்கம் செய்தல், பெயர் - முகவரி மாற்றம் செய்யும் பணிகள் போன்ற திருத்தம் செய்யும் பணிகளை படிவம் 6, 6-பி, 7, 8 ஆகிய படிவத்தில் பூர்த்தி செய்து, அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் தந்திட வேண்டும்.

தமிழ்நாடு முதல் அமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 2024-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதி அன்று, 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் - வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாதவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மும்முர மாக மேற்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம் ஏற்கனவே, நவம்பர் 4.11.2023 சனிக்கிழமை, 5.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தேதிகளில் நடைபெற்றது. அம்முகாமைப் பயன்படுத்தி, மாவட்டம் முழுவதும் புதிய வாக்காளர்களை சேர்க்கும்



பணியிலும், இறந்த - இடம் மாறிய வாக்காளர்களை நீக்கும் பணியிலும், அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கழகத்தினர் அனைவரும் சிறப்பான முறையில் ஈடுபட்டனர்.

நவம்பர் 18.11.2023 சனிக்கிழமை 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய 2 நாட்கள் இரண்டாம் கட்ட சிறப்பு முகாம் நடைபெறுவதாக இருந்தது. தீபாவளியையொட்டி நவம்பர் 13.11.2023 அன்று அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, 18.11.2023 சனிக்கிழமை வேலைநாளாக அறிவிக்கப்பட்டதால், இரண்டாம் கட்ட சிறப்பு முகாம் தேதியை நவம்பர் 25.11.2023 சனிக்கிழமை, 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்கள் நடைபெறும் என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார்.

எனவே, வருகிற நவம்பர் 25.11.2023 சனிக்கிழமை, 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்கள் காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாவட்டம் முழுவதும் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

மாவட்டம் முழுவதும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் அந்த 2 நாட்களில் வாக்காளர்களை சேர்க்கும் பணியிலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வார்டு கிளைகழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2), வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் இணைந்து இரு கரம் கோர்த்து இந்த இன்றியமையாத பணியினை இனிதே சிறப்பாக செய்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி மிகவும் முக்கியமானது என்பதை கவனத்தில் கொண்டு கழகத்தினர் அனைவரும் இணைந்து இப்பணியை முனைப்புடன் செய்திட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் இச்சிறப்பு பணியில் மாநகர-பகுதி-ஒன்றிய-நகர-பேரூர் கழக செயலாளர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் நேரில் சென்று, கழகத்தினர், வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் இணைந்து இப்பணியை சிறப்பாக செய்கிறார்களா என்பதை கண்காணிப்பு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்று மேலும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

### மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பாக

# தொகுதி வாரியாக பாக முகவர்கள் சிறப்பு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை !

மதுரை, நவ. 16 -

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதுரை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை மத்திய, மதுரை மேற்கு, மதுரை வடக்கு, மதுரை தெற்கு ஆகிய தொகுதிக்கான வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2)(BLC)கூட்டம் கீழ்க்கண்ட வாறு பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற உள்ளது.

தொகுதி தேதி நேரம் பற்றிய விவரம் வரு மாறு :

1. மதுரை மத்திய தொகுதி 16.11.2023 - வியாழக்கிழமை மாலை 5:00 மணி,

2. மதுரை மேற்கு தொகுதி 16.11.2023 - வியாழக்கிழமை மாலை 7:00 மணி,

3. மதுரை வடக்கு தொகுதி 17.11.2023 - வெள்ளிக்கிழமை மாலை 5:00 மணி ,

4. மதுரை தெற்கு தொகுதி 17.11.2023 - வெள்ளிக்கிழமை மாலை 7:00 மணி,

இந்நிகழ்வில் பகுதி, வட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் வாக்குச்சாவடி முகவர்களுடன் (BLA2)(BLC) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி, மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை!

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - பெ.ராமலிங்கம் - கே.பொன்னுசாமி முன்னிலை!

நாமக்கல், நவ. 16-

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் நாமக்கல நளா ஹோட்டலில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் வரவேற்றார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கூட்டத்தை துவக்கி வைத்து பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி பேசும் போது, வரும் 18ஆம் தேதி நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டும். ஒரு பூத்துக்கு 5 பேர் முதல் 10 பேர் வரை இளைஞர்களை நிகழ்ச்சிக்கு அழைத்து வர வேண்டும், அவர்களுக்கு வெள்ளை சீருடை வழங்கப்பட உள்ளது.

இளைஞர் அணி செயலாளர் முயற்சியால் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போதமலைக்கு சாலை வசதியும், நாமக்கல் பகுதிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கும் வழிவகை செய்து அந்த திட்டப்பணிகள் நடந்து வருகிறது.இதுவரை எந்த கட்சியும் செய்ய முடியாத இமாலய சாதனையையும், வரலாற்றுச் சாதனையையும் தி.மு.க. அரசு செய்துள்ளது.

எனவே சிறப்பாக நடத்திட வேண்டும் ஏனென்றால் இன்னொரு தேதி நமக்கு அரசாங்கத் திட்டங்களை முதலமைச்சர் திறந்து வைக்கின்ற தொடங்கி வைக்கின்ற அரசு திட்டங்கள் பல திட்டங்கள் நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்தி முடித்து விடுங்கள் என்று அவர் ஆணையிட்டதன் காரணமாக நாம் இந்த விரைவாக இந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டிய பொறுப்பு நமக்கு வந்திருக்கிறது .

அதேபோல் நீண்ட காலமாகவே நாமக்கல் புறவழிச் சாலைக்கு நிலம் கையகப்படுத்துவதில் பிரச்சனை இருந்து வந்தது அதையெல்லாம் போக்கி இப்பொழுது பணிகள் துவங்கக்கூடிய நிலையில் உள்ளது. நாமக்கல் புறவழிச் சாலைக்கு 190 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அதற்கு ஆணை வழங்க பெரிதும் காரணமாக இருந்தவர் நம்முடைய இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கு சிறப்பாக வரவேற்பு அளிக்க வேண்டும்.

மேலும் நாமக்கல் சேந்தமங்கலம், எருமப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகள் பயன் அடையும் வகையில் ரூ. 750 கோடி மதிப்பிலான புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறப்பட்டு, அனைத்துக் கிராம மக்களும் பயனடையும் வகையில் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகிறது காரணம் எருமப்பட்டி போன்ற ஒன்றியங்களில் நிலத்தடி நீர் மிகவும் உப்பு அடைந்ததாக காணப்படுவதினால் அதனை குடிக்கும் நபர்களுக்கு 40 வயதிலேயே சிறுநீர் பாதிப்பு உள்ளிட்ட நோய்கள் ஏற்பட்டு மிகப் பெரிய மருத்துவம் பார்க்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது இதனை கருத்தில் கொண்டு அவர்களுக்கும் காவிரி நீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

கூட்டத்தில் மாவட்டத் துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. இராமசுவாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பவுத்திரம் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் சுசிதரன், பூவராகவன், சரவணன், கண்ணன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மாநில செயலக அணி துணை செயலாளர் முத்துவேல்,

நகர செயலாளர்கள் ராணாஆனந்த் சிவகுமார், பூபதி, என்ஆர்.சங்கர், இராமசுவாமி, ஒன்றிய செயலாளர்கள் பழனிவேல் ஜெகநாதன் நவலடி கௌதம் பால சுப்பிரமணியம் துரைசாமி செந்தில்முருகன், ஜெயப்பிரகாஷ், பேரூர் கழக செயலாளர் பொன்.நல்ல தம்பி, சுப்பிரமணியன், முருகேசன், , ஜெயக்குமார், அன்பழகன், ராஜேஷ், கண்ணன், செல்லவேல் தனபால், பழனியாண்டி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சத்தியசீலன் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பொன்.சித்தார்த் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட பொருளாளர் ஏ.கே. பாலச்சந்திரன் நன்றி கூறினார்.

அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தட்டுப்பாடு என எதிர்க்கட்சித் தலைவர்

# எடப்பாடி பழனிசாமி எதையும் அறியாமல் பொறுப்பற்ற அறிக்கை விடுவதா?

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடும் கண்டனம்!

சென்னை, நவ.16 -

அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தட்டுப்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தன் இருப்பை காட்டிக் கொள்வதற்காக பொறுப்பில்லாமல் அறிக்கை விடுகிறார் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமான பதில் அளித்துள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தமிழ்நாட்டில் மருந்துகள் மற்றும் மருத்துவர்கள் தட்டுப்பாடு நிலவுகிறது என்கின்ற வகையில் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதற்கு நான் அவரிடம் தட்டுப்பாடு எங்கு நிலவுகிறது என்று தெரிவித்தால், அதனை நிவர்த்தி செய்து தருவதாகவும் தெரிவித்திருந்தேன். மேலும், தமிழ்நாடு மருந்து சேவை கழகத்தின் மூலம் (Tamilnadu Medical Service Corporation) தமிழ்நாட்டில் மருந்துகள் இருப்பு நிலவரம் குறித்து அறிக்கை வெளியிட்டிருந்தேன். ஆனால் இதனை கருத்தில் கொள்ளாமல் இன்றும் எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

### தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் சிறந்த செயல்பாடுகளின் காரணமாக தமிழ்நாடு மருத்துவத்துறை பல்வேறு விருதுகளை கடந்த ஓராண்டாக வாங்கி வருகிறது. 2013-ஆம் ஆண்டு முதல் தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NQAS - National Quality Assurance Standards Certificate) வழங்கப்பட்டு வருகிறது. 2013-ஆம் ஆண்டிற்கு பிறகு 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு கிடைத்த மொத்த விருதுகள் எண்ணிக்கை 549 ஆகும். ஆனால் கடந்த ஓராண்டில் மட்டும் தமிழ்நாட்டிற்கு கிடைத்த விருதுகள் எண்ணிக்கை 310 ஆகும்.

அதேபோல் மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் (LaQshya - Labour Room Quality Improvement Initiative) 2017-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன் கீழ் 6 ஆண்டுகளில் பெறப்பட்ட ஒட்டு மொத்த சான்றிதழ்கள் 79 ஆகும். இதில் இந்த ஆண்டு மட்டும் 45 சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. இதனை எடப்பாடி பழனிச்சாமி தெரிந்துக்கொள்ள வேண்டும். மேலும், அவர் சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். நான் முன்னரே கூறியது போல் நீங்கள் 10 ஆண்டுகளில் இந்த மாநிலத்தில் எத்தனை முறை சுற்றி வந்திருக்கிறீர்கள், எத்தனை மலைக்கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு சென்றிருக்கிறீர்கள், எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீங்களோ அல்லது உங்கள் அமைச்சர் அவர்களோ சென்றிருக்கிறீர்கள், நாங்கள் எத்தனை முறை இதை செய்திருக்கின்றோம் என்று தெரிந்து கொண்டு, இது குறித்து எங்களிடம் நேரிடையாக விவாதிக்க தயாரா?

### ஒளிந்து கொண்டு பேசுவது அழகல்ல!

ஆகையால் எடப்பாடி பழனிச்சாமி ஆகிய நீங்களோ அல்லது உங்களை சார்ந்த ஒருவரோ சட்டமன்றம் நடக்கும்போது இது குறித்து பேசலாம். சட்டமன்றம் நடக்காதபோது எங்கேயோ ஒரு இடத்தில் ஒளிந்துக்கொண்டு பேசுவது எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு அழகல்ல.

எடப்பாடி பழனிச்சாமி மருந்து மாத்திரைகள் 30 நாட்களை கடந்தும் இல்லை என்று அறிக்கை விட்டு இருக்கிறார். தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (TNMSC) என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வருடத்திற்கும் எவ்வளவு மருந்துகள் வாங்கப்படுகிறது என்று பார்த்தோமேயானால் 313 அத்தியாவசிய மருந்துகள் வாங்கப்படுகிறது, 234 வகையான மருத்துவ அறுவை மற்றும் தையல் உபகரண சாதனங்கள், 326 சிறப்பு மருந்துகள் மற்றும் 7 இரத்தம் உறைதல் சம்பந்தப்பட்ட மருந்துகள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு ஏழை மக்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பொது சுகாதார இயக்குநரகத்தின் சார்பில் பூச்சிக் கொல்லி சம்பந்தமான மருந்துகள் வாங்கித்தரப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகள் ஒவ்வொரு ஆண்டும் அதன் தரத்தை நிர்ணயம் செய்து எவ்வளவு தேவை என்று குறிப்பிடப்பட்டு வாங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களில் மருந்து கிடங்குகள் உள்ளது.

இந்த 32 மாவட்டங்களில் உள்ள மருந்து கிடங்குகள் மூலம் ரூ.326.92 கோடி மதிப்பீட்டில் மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதியதாக 6 மாவட்டங்களிலும் மருந்து கிடங்குகள் அமைக்க ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கொள்முதல் செய்யப்பட்டுள்ள மருந்துகள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் தேவைக்கேற்ப பிரித்து அனுப்பப் பட்டு, தற்போது கையிருப்பில் உள்ள மருந்துகள் தொகை ரூ.240.99 கோடி ஆகும்.

### பணியாளர் தேர்வு வாரியப் பணிகள்!

இதற்கு பிறகும் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு மருந்துகள் தட்டுப்பாடு இருக்கிறது என்ற சந்தேகம் இருக்குமேயானால் வாருங்கள், நானும் உடன் வருகிறேன், நேரடியாக சென்று ஆய்வு செய்வோம்.

மேலும் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மருத்துவ காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று கூறியிருக்கிறார். இது தொடர்பாக நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். மருத்துவர்கள் பணியிடங்கள் 1021, மருந்தாளுநர் பணியிடங்கள் 986, சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் 1,066, கிராம சுகாதார செவிலியர்கள் 2,222 மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் (MRB) மூலம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக நடைபெற்ற பல்வேறு வழக்குகள் தற்போது முடிவிற்கு வந்துள்ளது. சான்றிதழ்கள் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்துள்ளது. விரைவில் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பணி நியமனம் செய்யப்படவுள்ளனர்.

எடப்பாடி பழனிச்சாமிக்கு வேறு ஏதேனும் சந்தேகம் இருந்தால் தெரிவிக்கலாம். அது தொடர்பாக விவாதம் செய்ய தயாராகவே உள்ளோம் என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழக இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக கேரள மாநிலம் திருவனந்தபுரம் விமான நிலையம் வந்தடைந்தார்கள்.அவர்களை கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், குழித்துறை நகர்மன்ற தலைவர் ஆசைத்தம்பி, சிற்றார் ரவிச்சந்திரன், சப்பாத்து ராஜன், அனீஷ், முகமது ஷாபி, அருள் ஜோதி மற்றும் கேரள தி.மு.க. மற்றும் இளைஞர் அணி உட்பட அனைத்து அணி நிர்வாகிகளும் விமான நிலையத்தில் வரவேற்றனர். அதைத் தொடர்ந்து அங்கிருந்து கன்னியாகுமரி புறப்பட்டுச் சென்றனர். பால் வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் உடன் சென்றார்.

# ஐஸ்லாந்து நாட்டில் நில அதிர்வு!

ரெய்காவிக், நவ. 16 -

தொடர்ச்சியான நில அதிர்வுகளின் விளைவாக எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல் அதிகரித்ததன் காரணமாக, ஐஸ்லாந்து நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஐஸ்லாந்து நாட்டில், கடந்த 14 மணி நேரத்தில் 800 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டிருப்பதால் அங்கு எரிமலை வெடிப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டு, அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதனால், அந்நாட்டில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் அச்சத்தில் உள்ளனர். ஐஸ்லாந்தின் தென் மேற்கு ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில்தான் 14 மணி நேரத்தில் தொடர்ந்து சுமார் 800 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் வடக்கு கிரண்டாவிக் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவாகியுள்ளது. இதனால், கிரிண்டாவிக் அருகே உள்ள பிரபல சுற்றுலா தலமான ப்ளூ லகூன் மூடப்பட்டுள்ளது.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஒருங்கிணைந்த வளாகத்தில், நேற்று முன்தினம் (14.11.2023) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் 70வது கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு கூட்டுறவுக் கொடியினை ஏற்றிவைத்தார். சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆஷா அஜித் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.





கலைஞர் 100
1924 - 2023
தூத்துக்குடி மாநகர
மக்களின் நீண்ட நாள் கோரிக்கையும்
கடந்த சட்டமன்ற தேர்தல் அறிக்கையில்
அளித்த வாக்குறுதியின்படி தூத்துக்குடி
மாநகருக்கு குடிநீர் பெற்றுத் தந்த
கோமான் ஐயா
குருஸ் பர்னாந்து
அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்து தந்த
கழக தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதல்வர்
அவர்களுக்கு
நன்றி! நன்றி!! நன்றி!!!
வணக்கத்துடன்: பி.கீதாஜீவன் எம்.காம்.,பி.எட்.,
சமூக நலன் – மகளிர் உரிமை துறை அமைச்சர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க

## பால் வளத்துறை சார்பில்

# ரூ.12 கோடி செலவில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 16-**

**பால்வளத்துறை சார்பில் ரூ.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கால் நடை தீவனம் மற்றும் மூலப்பொருட்கள் சேமிப்புக் கிடங்கு, பால் உற்பத்தியாளர் ஒன்றிய அலுவலகக் கட்டடம், பால் பவுடர் சேமிக்கும் கிடங்கு, பயிற்சி நிலையம், மகளிர் விடுதி, நூலகம், ஆய்வுக் கூடம் மற்றும் திருப்பூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2023) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறை சார்பில் ஈரோட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, திருநெல்வேலி மாவட்ட ஒன்றியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி நிதியுதவியின் மூலம் மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலகம், ஆய்வகம், விடுதி வசதியுடன் கூடிய பயிற்சி நிலையக் கட்டடங்கள், தருமபுரியில் அலுவலகத்துடன் கூடிய பால் கொள்முதல் பிரிவுக் கட்டடம், திருவண்ணாமலையில் பால் பவுடர் ஆலையில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு, திருப்பூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கான அலுவலகக் கட்டடம், என மொத்தம் 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.வினீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2023) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறை சார்பில் 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் ஈரோட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு சேமிப்புக் கிடங்கு, திருநெல்வேலி மாவட்ட ஒன்றியத்தில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி நிதியுதவியின் மூலம் 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூலகம், ஆய்வகம், விடுதி வசதியுடன் கூடிய பயிற்சி நிலையக் கட்டடங்கள், தருமபுரியில் 2 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் அலுவலகத்துடன் கூடிய பால் கொள்முதல் பிரிவுக் கட்டடம், திருவண்ணாமலையில் பால் பவுடர் ஆலையில் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு, திருப்பூரில் 3 கோடி ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கான அலுவலகக் கட்டடம், என மொத்தம் 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,578 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு சராசரியாக 33 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து தனது 4 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் 30 இலட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை பெற்று, சிறப்பாக செயலாற்றி வருகிறது.

### ஈரோட்டில் கால்நடை தீவன சேமிப்புக் கிடங்கு!

ஈரோடு மாவட்டத்தில் தீவன உற்பத்தி திறன் தற்போது நாளொன்றுக்கு 150 மெட்ரிக் டன்னிலிருந்து 300 மெட்ரிக் டன்னாக தரம் உயர்த்தப்பட்டு, கால்நடை தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. எனவே அதிகரித்துள்ள உற்பத்திக்கான மூலப்பொருள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட தீவனத்தினை சேமித்து வைப்பதற்காகவும், தரமான கால்நடை தீவனத்தை வழங்கி பால் உற்பத்தியை அதிகரிக்கவும், 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு;

### திருநெல்வேலியில் பயிற்சி நிலையம்!

திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தி கூட்டுறவு ஒன்றியத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்கட்டடம் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளதால் பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்க இயலாத நிலை இருந்து வருகிறது. மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தின் கீழ், 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிருக்கான நூலகம், ஆய்வகம், விடுதி வசதியுடன் கூடிய பயிற்சி நிலையக் கட்டடம்;

### தருமபுரியில் ஒன்றிய அலுவலகக் கட்டடம்!

தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஆகஸ்ட் 2019 அன்று முதல் கிருஷ்ணகிரி ஒன்றியத்திலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது தனியே அலுவலகக் கட்டடம் இல்லாததால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியின் கீழ் தருமபுரியில் 2 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அலுவலகம் மற்றும் பால் கொள்முதல் பிரிவு கட்டடம்;

### திருவண்ணாமலையில் பால் பவுடர் ஆலையில் சேமிப்புக் கிடங்கு!

திருவண்ணாமலை பால் பவுடர் ஆலையில் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி திறனில் மாவட்ட ஒன்றியங்களின் உபரிப் பாலை உருமாற்றம் செய்து சேமித்து வைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. தற்போது 1500 மெட்ரிக் டன் கிடங்கு உள்ளது. அதிக உற்பத்தி காலத்தில் கிடங்கின் கொள்ளளவு போக மாவட்ட ஒன்றியங்கள் தங்களின் பால் பவுடரை தனியார் மற்றும் இதர சேமிப்புக் கிடங்குகளில் வாடகைக்கு வைத்துள்ளதால் கூடுதல் செலவீனம் ஏற்பட்டு வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் நிதியின் மூலம் ரூ. 2 கோடியே 93 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் சேமிப்பு கிடங்கு;

### திருப்பூரில் ஒன்றிய அலுவலகக் கட்டடம்!

திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் டிசம்பர் 2018 அன்று முதல் ஈரோடு ஒன்றியத்திலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது தனியே அலுவலகக் கட்டடம் இல்லாததால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 3 கோடி ரூபாய் செலவில் திருப்பூரில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடம்; என மொத்தம் 12 கோடி ரூபாய் செலவில் பால்வளத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பால் உற்பத்தி மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் மரு.எஸ்.வினீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### கோயம்பேடு - ஆர்க்காடு சாலையில் - சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம்

# குடிநீர் குழாய் இணைப்புப் பணி- குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

*சென்னை, நவ. 16 -*

கோயம்பேடு காளியம்மன் கோயில் தெரு மற்றும் ஆற்காடு சாலையில் உள்ள அஞ்சலகம் அருகில் குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) மேற்கொள்ளப்படுவதால் 17.11.2023 அன்று காலை 7.00 மணி முதல் 18.11.2023 மாலை 7.00 மணி வரை மண்டலம்-8, 9, 10 மற்றும் 11க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் குறித்து சென்னை குடிநீர் வாரியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-

கோயம்பேடு காளியம்மன் கோயில் தெரு மற்றும் ஆற்காடு சாலையில் உள்ள அஞ்சலகம் அருகில் குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) மேற்கொள்ளப்பட உள்ளதால் சூளைமேடு நீர் பகிர்மான நிலையம் மற்றும் வள்ளுவர் கோட்டத்தில் உள்ள புதிய நீர் பகிர்மான நிலையம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட உள்ளது. ஆகையால், 17.11.2023 அன்று காலை 7.00 மணி முதல் 18.11.2023 மாலை 7.00 மணி வரை, மண்டலம்-8 (அண்ணா நகர்), மண்டலம் 9 (தேனாம்பேட்டை), மண்டலம் 10 (கோடம்பாக்கம்) மற்றும் மண்டலம் 11(வளசரவாக்கம்)க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

அண்ணா நகர் மண்டலம் 8 -ல், அரும்பாக்கம், எம்.எம்.டி.ஏ காலனி, தேனாம்பேட்டை - மண்டலம்9-ல் சூளைமேடு, நுங்கம்பாக்கம், ஆயிரம் விளக்கு, கோபாலபுரம், தியாகராய நகர் (பகுதி), தேனாம்பேட்டை, மண்டலம்10 (கோடம்பாக்கம்) கோயம்பேடு, சின்மயா நகர், விருகம்பாக்கம், சாலிகிராமம், வடபழனி, ரங்கராஜபுரம், தியாகராய நகர், மேற்கு மாம்பலம், அசோக் நகர், சி.ஐ.டி.நகர், மண்டலம்11 (வளசரவாக்கம்) தாய்சா அடுக்குமாடி வளாகம்

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.




கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல்துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ, மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு உறுப்பினர் இ .ஜி .சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், நரசிம்மன், மாநில மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர் காஞ்சனாகமலநாதன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர்கள் டேம்.வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

### நே.சிற்றரசு தலைமை! தயாநிதிமாறன் எம்.பி. - அன்பகம் கலை - டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# சென்னை மேற்கு மாவட்டப் பிரதிநிதி பூ.கா.சாமிவேல் இல்ல மண விழா வரவேற்பு!

## அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாழ்த்துரை!

*சென்னை , நவ. 16 -*

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, மாவட்டப் பிரதிநிதி பூ.கா.சாமிவேல் - எஸ்.மகேஸ்வரி ஆகியோரின் புதல்வி எஸ்.காவிய லஷ்மிக்கும்,திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி டவுன், பெரியார் நகர் டி.சதீஷ் - அஸ்வினி இவர்களின் தம்பி டி.சரத்குமாருக்கும் மணவிழா வரவேற்பு இன்று (16.11.2023 - வியாழக்கிழமை) மாலை 6 மணியளவில் மயிலாப்பூர், லஸ், காட்டுக்கோயில் சர்ச், பிரகாச மாதா கம்யூனிட்டி ஹாலில் நடைபெறுகிறது.



இம்மணவிழா வரவேற்பிற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

தயாநிதி மாறன் எம்.பி., அன்பகம் கலை, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், ஜெ.நற்குணநாதன், துபாய் வி.ஆர்.விஜய், வி.எஸ்.கலை, யு.மல்லிகா யுவராஜ், பி.கே.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.டி.பாபு, இ.ஏழுமலை, அசோக், கே.வேல் முருகன், ஜெ.எம்.மணி வண்ணன், நே.திருமாறன், ஜெ.சரளாகுமாரி, முகமது அப்சல். பி.சத்திய நாராயணன், சி.மூர்த்தி, சூரியன், கே.பிரபு, போட்டோ கே.செல்வம், சூரியன் கே.சிவா, பி.பி.பரிமளம், இ.ஜான், ஏ.ஜெயகாந்தி, ஆர்.முரளி, ஜி.லஷ்மணன், என்.ஜி.குமார், எஸ்.பிரேம் குமார், ஏ.லஷ்மணன், என்.ஜி.குமார், எஸ்.பிரேம் குமார், ஏ.கிருஷ்ணமூர்த்தி, டிங்கர் டி.வேலு, எம்.வாசு, ஆனந்த் ஜெயின், குட்டி (எ) குணசேகர், எஸ்.ஜெயலஷ்மி, ஏ.முருகேசன், பி.ராஜூ, டி.பாஸ்கர், என்.புருசோத்தமன், எம்.சரவணன், தாம்பரம் பிரபா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., கு.க.செல்வம், நுங்கை வி.எஸ்.ராஜ், ஜெ.கென்னடி, கே.ஜே.சரவணன், கலை கதிரவன், மன்சூர் அலிகான், வி.பி.மணி, எம்.டி.ஆர்.நாதன், பா.இராபட், வெற்றி செல்வி, வி.என்.ராஜன், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, துபாய் வி.ராஜேந்திரன், வ.கணேசன், எம்.எஸ்.காமராஜ், எஸ்.என்.கோபிராஜன், ஆர்.வி.கிரிஸ்டி, எம்.சரவணன், டி.ஜி.மணி, துவிக்டர், ஆர்.என்.துரை, ஜெ.எஸ்.அக்ஸ்டின்பாபு, ஏ.சங்கீதா,

ந.இராமலிங்கம், ஏ.ஆர்.பி. எம்.காமராஜ், எஸ்.மதன்மோகன், ச.பரமசிவம், கே.ஏழுமலை, நந்தனம் மதி, பா.பிரகாஷ், ச.அசோக் குமார், எஸ்.யோகேஸ்வரி, டாக்டர் ஜவீகன் அய்யநாதன், டி.எஸ்.ராஜா, வழக்கறிஞர் தேவேந்திரன், டி.கே.லதா பிளாரண்ஸ், கு.பிச்சையம்மாள், சுலோக்சனா ராமு, பி.சீனிவாசன், எம்.டி.ஆர்.சாரதி, எம்.கே.ஆனந்த், சி.கே.ரெங்கராஜ், ரகமத்துல்லா, இளம் பாரதி, ராஜராஜன், ஏ.விஜயராஜ், அரவிந்த் குமார், ஜெ.எம்.எச்.இம்ரான், எம்.மோகனவேல், யூ.பிரவீன்ராஜ், எஸ்.சரண்,

எம்.ஆர்.ஜம்புலிங்கம், கோ.ரவி, மு.வெங்கடேசன், மா.ஜெயக்குமார், டி.வைலட்மேரி, புவி பாலாஜி, என்.பி.இதாயத் பாஷா, ஸ்டெர்லிங் கமல கண்ணன், பி.பொ ன்னம்மாள்,

கோ.யுவராஜ், எஸ்.என்.கே.ராமன், ஆர்.பாபு, எப்.பீட்டர்ஜான், எஸ்.சத்திய பெருமாள், டி.தேவராஜ், எல்.தவமணி, நுங்கை ப.மகேஷ், என்.எம்.விஷ்ணு, வரதை த.பரி, த.குணசேகர், க.சிட்டிபாபு, கே.எஸ்.தினேஷ் பாபு, டேவிட் இன்பராஜ், மு.மோகன், ஐ.ஓ.பி. ராஜேந்திரன், டி.ராஜவேலு, மு.இ.ஏழுமலை, சீ.கிருஷ்ணமூர்த்தி,

பிரேமா சுரேஷ் எம்.சி., பி.திருமலை பொன்னுரங்கம் எம்.சி., எம்.ஏ.நந்தினி எம்.சி., எலிசபெத் அக்ஸ்டின் பாபு எம்.சி.,

ஜெ.சிவலிங்கம், ஜெ.வரதராஜன், ஏ.பி.ராமநாதன், கி.ஜான்டிசில்வா, ஏ.கண்ணன், எஸ்.குணசேகரன், சி.பாட்ஷா (பாபு), கே.பி.வினோத், நுங்கை பி.ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எம்.பாஸ்கர், ஜெ.கே.குமார், டைல்ஸ் கண்ணன், பி.கமலகண்ணன், பி.முருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---


### சங்ககிரி மேற்கு முரசொலி முகவர்

# எஸ்.கோபாலன் இல்ல மணவிழா வரவேற்பு!

## கழகத்தினர் வாழ்த்து!

*சென்னை, நவ.16 -*

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் வட்டம் படை வீடு கிராமத்தைச் சேர்ந்த சங்ககிரி மேற்கு முரசொலி முகவர் எஸ்.கோபாலன் - ஜி.பார்வதி இணையரின் மகள் ஜி.தமிழ்அமுதம், ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் எண்ணமங்கலம் கிராமம் ஆர்.சண்முகம், தெய்வத்திரு எஸ். விஜயலட்சுமி இணையரின் மகன் எஸ்.கார்த்திகேயனுக்கும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (16.11.2023 - வியாழக்கிழமை) காலை 8 மணிக்கு. அந்தியூர் காட்டூர் பவானி மெயின் ரோட்டில் உள்ள பிருந்தாவன் மஹாலில் நடைபெறுகிறது.



இம்மண விழா வரவேற்பில் கழகத்தினரும், மணமக்களின் உறவினர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



பெரம்பலூர் மாவட்டச் செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் தொகுதி பொறுப்பாளர் அன்னியூர் சிவா, குன்னம் தொகுதி பொறுப்பாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதில் மாநில, மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம்,குண்டல்மடுவு கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத்தலைவர் அவர்களின் திட்டமான முத்தமிழறிஞர் கலைஞர் காலை உணவுத் திட்ட சமையல் கூடக் கட்டிடத்தை தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் திறந்து வைத்து மாணவ,மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கினார்.உடன் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியக் கழக செயலாளர் பி.எஸ்.சரவணன்,மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அ.சத்தியமூர்த்தி,ஊராட்சிமன்றத் தலைவர் அருணாசலம்,ஒன்றியக் குழு உறுப்பினர் தாமோதரன் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில்

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் அறிக்கை!

திண்டுக்கல், நவ. 16 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர்அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி, 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர்பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் செய்திடகடந்த 27.10.23 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும் திருத்தம் செய்வதற்கும் வசதியாக வருகிற 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய அனைத்து நிர்ணயிக்கப்





பட்ட வாக்குச் சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நமது கழக அரசு, வருகின்ற 18ஆம் தேதியை பணி நாளாக அறிவித்துள்ளதால் அன்றைய தினம் மற்றும் 19ஆம் தேதி ஆகிய தேதிகளில் நடைபெறவிருந்த சிறப்புமுகாம் 25.11.23 சனிக்கிழமை மற்றும் 26.11.23 ஞாயிற்றுக்கிழமை ஆகியதேதிகளில் நடைபெறும் எனதேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் நாட்களில் திண்டுக்கல் கிழக்குமற்றும் மேற்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

முன்னாள் இன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து சார்பு அணிநிர்வாகிகள், அந்தந்த வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) வாக்குச் சாவடி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினைபயன்படுத்திவாக்காளர்பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறும்,

இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா - ‘எழுத்தாளர் கலைஞர்’ குழு சார்பில்

# சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை புரிந்த ‘முத்தமிழ்த்தேர்’ அலங்கார ஊர்தி!

## குழுத் தலைவர் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வரவேற்று மரியாதை!

சிவகங்கை, நவ. 16-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, கலைஞர் அவர்களின் புகழை போற்றிடும் வகையில், “எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில், சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை புரிந்த முத்தமிழ்த் தேர்: அலங்கார ஊர்தியினை, “எழுத்தாளர் கலைஞர்” குழுவின் தலைவர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வரவேற்று, கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, “எழுத்தாளர் கலைஞர்” குழுவின் சார்பில், சிவகங்கை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் (14.11.2023) வருகை புரிந்த ”முத்தமிழ்த்தேர்” அலங்கார ஊர்தியினை, “எழுத்தாளர் கலைஞர்” குழுவின் தலைவர்மற்றும்கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித் தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வரவேற்றார்.

அப்போது அவர் தெரிவிக்கையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, அதனை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிடும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றான, “எழுத்தாளர் கலைஞர்” குழுவின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகள் மற்றும் அவரது பரிமாணங்களை போற்றிடும் வகையில், பல்வேறு முன்னெடுப்புக்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலும், இன்றைய இளம் தலைமுறையினர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையை எடுத்துக்கூறும் வகையிலும், எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில், கலைஞர் அவர்களின் புகழ் பாடும் “முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி” தயார் செய்யப்பட்டுள்ளது.

இவ்வூர்தியினை மிக நேர்த்தியான முறையிலும், கலைநயத்துடனும் திறன் மிக்க சிற்பியைக் கொண்டும், கூட்டுறவுத்துறைக்கென நியமிக்கப்பட்டுள்ள செய்தி மக்கள் தொடர்பு துறையைச் சார்ந்த அலுவலர் ஆகியோர்களின் துணை கொண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இத்தருணத்தில் அவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த அலங்கார ஊர்தியின் வாயிலாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ்ச் சமூகத்திற்கு படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும் தமிழகம் முழுவதும் பறைசாற்றுகின்ற வகையில் அனைத்து மாவட்டங்களுக்கு பயணிக்கின்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 04.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில்,”முத்தமிழ்த்தேர்” அலங்கார ஊர்தி துவக்கி வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் இந்த அலங்கார ஊர்தியானது பயணிக்கப்பட்டு, அதன்படி, நேற்றைய தினம் (14.11.2023) நமது சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை புரிந்துள்ளது. அதில், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இவ்வூர்தியானது தொடங்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட அரண்மனை வாசல் அருகிலும், திருப்பத்தூர் அண்ணா சிலைஅருகிலும் மற்றும் காரைக்குடி கண்ணதாசன் மணி மண்டபம் அருகிலும், இவ்வூர்தியானது காட்சிப்படுத்தப்பட உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, அவர்களின் புகழை போற்றுகின்ற வகையில், “எழுத்தாளர் கலைஞர்” குழுவின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நிகழ்வுகளில் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் என “எழுத்தாளர் கலைஞர்” குழுவின் தலைவர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மோகனச்சந்திரன், மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, மானாமதுரை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, திருப்பத்தூர் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், முன்னாள் அமைச்சர் தென்னவன், மானாமதுரை நகராட்சி ஆணையாளர் திருமதி. ரங்கநாயகி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை எழிலகத்தில் உள்ள அயலகத் தமிழர் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (14.11.2023) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு உதவுவதற்காக 24 X 7 மணிநேரமும் இயங்கக்கூடிய கட்டணமில்லா தொலைபேசி மையத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை அரசு கூடுதல் செயலாளர் அ.சிவஞானம், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் மற்றும் உறுப்பினர்செயலர் திருமதி ஜெசிந்தா லாசரஸ் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கிருஷ்ணகிரி, நவ. 16 -

கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிப்பது என தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது. இக்கூட்டத்தில் அமைச்சர்அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல்துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், நரசிம்மன், மாநில மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர்காஞ்சனா கமலநாதன், மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் வருகிற 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகை தந்து முத்தமிழர் அறிஞர் தலைவர் கலைஞர் சிலையை திறந்து வைத்து, மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. இல்ல திருமண வரவேற்பு விழா, கிருஷ்ணகிரி நகர செயலாளர் நவாப் இல்ல திருமண விழா,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் இல்ல திருமண விழாக் களில் கலந்து கொள்வதற்காக கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு பிரம்மாண்டமான வரவேற்பளிப்பது எனவும்,

திராவிட முன்னேற்ற கழக மாநில இளைஞரணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமையில் சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி நடைபெற உள்ள திமுக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பெருந்திரளாக கலந்து கொள்வது எனவும், இந்தியா நாடே உற்று நோக்கும் திட்டமான தமிழகத்தில் உள்ள மகளிர் மேம்பாடு அடைய வேண்டும் என்ற சீரிய நோக்கில் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் வழங்கிய கலைஞர் மகளிர் உரிமை திட்டம் இரண்டாம் கட்டமாக வழங்கிய கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா, மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, புஷ்பா சர்வேஷ், சின்னசாமி, வீரா ரெட்டி,

தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் கிருபாகரன், பரிதா நவாப், நாகராசன், பாலன், அஸ்லாம், சித்ரா சந்திர சேகர், கோதண்டன், எல்லோரா மணி. கிரீஸ், ஜெயராமன், அருணா பூசன், அப்துல் கலாம், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், குண. வசந்தரசு, ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், குமரேசன் சீனிவாசலு ரெட்டி, திவாகர். ரகுநாத், நாகேஷ், சின்ராஜ். பாக்கியராஜ் கஜேந்திர மூர்த்தி, ராஜா, கருணாகரன், ஸ்ரீதர், பேரூர் கழக செயலாளர்கள் பாபு, தம்பி துரை, வெங்கடப்பன், பாபு சிவகுமார், சீனிவாசன்.

தஷ்தகீர் உள்ளிட்ட மாவட்ட , ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### நிர்வாகத்தை தயார் நிலையில் வைத்திருக்க வலியுறுத்தி

# மாவட்ட ஆட்சியர்களுக்கு வருவாய்த்துறை கடிதம்!

சென்னை, நவ. 16 -

வருவாய்த் துறை நிர்வாக ஆணையர் பிரபாகர் எழுதியுள்ள கடிதத்தில், வானிலை ஆய்வு மையங்கள் கனமழை முதல் மிக கனமழை எச்சரிக்கைவிடுத்துள்ளதால்,

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, கடலூர், நெல்லை, சிவகங்கை, பெரம்பலூர், அரியலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர், சென்னை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருச்சி, விருதுநகர், மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய 27 மாவட்ட மாவட்ட நிர்வாகங்களை தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பேரிடர்களைக் கையாள்வதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும், முழு மாவட்ட நிர்வாகங்களை தயார் படுத்தவும் மாவட்ட ஆட்சியர்களை வருவாய்த்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் துரை. கிருஷ்ணமூர்த்தி
### நவம்பர் 16 (1999)



**மருத்துவரான இவர், திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1989ஆம் ஆண்டு சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில், கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, தொகுதி வாழ் மக்களுக்காக பணிபுரிந்து அனைவரின் பாராட்டைப் பெற்றவர்.**

**தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தாயாக - தந்தையாக அனைத்துமாக இருந்து

# மாணவச் செல்வங்களை கல்வியே பாதுகாக்கும்!

## சாதனை படைத்த 114 பள்ளிகளுக்கும் 180 மாணவர்களுக்கும் கேடயங்கள் - பரிசுகள் வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!






**சென்னை, நவ. 16-**

**சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், குழந்தைகள் தினத்தை முன்னிட்டு பள்ளிக்கல்வித்துறை சார்பில், சிறந்த பள்ளிகளுக்குக் கேடயங்கள் வழங்குதல் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்குப் பரிசுகள் வழங்கும் விழாவில் உரையாற்றிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தாயும் தந்தையுமாக இருந்து மாணவச் செல்வங்களை கல்வியே பாதுகாக்கும் எனக் குறிப்பிட்டார்.**

விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

முதலில் இங்கு வந்துள்ள மாணவ-மாணவியர் அத்தனை பேருக்கும் என்னுடைய குழந்தைகள் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய ஒன்றியத்தின் முதல் பிரதமர் மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடத்தப்படுகிற இந்தச் சிறப்புக்குரிய நிகழ்வில் பங்கேற்பதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, இந்திய ஒன்றியத்துக்கே வழிகாட்டும் வகையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதிலும், குறிப்பாகப் பள்ளிக்கல்வித்துறை இன்றைக்குப் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறது. அதற்கு என்னுடைய பாராட்டுகளை வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு கல்வியாண்டிலும் பல்வேறு அம்சங்களில் சிறப்பாகச் செயல்படும் பள்ளிகள் தேர்வு செய்யப்படுகின்றன. மாவட்டத்துக்கு 3 அரசுப்பள்ளிகள் என்கிற வகையில், 114 பள்ளிகளுக்கு இன்றைய தினம் கேடயங்கள் வழங்கப்படுகின்றன. அத்தனை பேருக்கும் எனது பாராட்டுகளை வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### குழந்தைகளுக்குப் பரிசுகள்!

மாணவர்களுக்கு ஓவியப்போட்டி - கட்டுரைப் போட்டி - பேச்சுப் போட்டி ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்பட்ட மாணவ - மாணவியர்கள் சுமார் 180 பேருக்கு இங்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

குழந்தைகள் தினத்தில், குழந்தைகளுக்குப் பரிசு வழங்குவோம். ஆனால், இங்கு அந்தக் குழந்தைகளை உருவாக்குகிற பள்ளிகளுக்கும் பரிசுகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இல்லம் தேடி கல்வி - எண்ணும் எழுத்தும் - நான் முதல்வன் - பள்ளி மேலாண்மைக் குழு - வாசிப்பு இயக்கம் - மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் என 50க்கும் அதிகமான முன்னெடுப்புகளை நம்முடைய பள்ளிக் கல்வித்துறை எடுத்து வருகின்றது.

இவற்றில் சிறந்து விளங்கும் பள்ளிகள் மற்றும் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பது குறைந்தது 5 புதிய கற்றல் யுக்திகளைக் கையாண்டு பாடம் நடத்துதல் - மாணவர்களின் திறமையை வெளிக் கொண்டு வருவதற்கான சூழலை ஏற்படுத்துவது - பள்ளி உட்கட்டமைப்பு வசதி கழிப்பறை வசதி - குடிநீர் வசதி எனப் பல்வேறு Parametersன் அடிப்படையில் தான் சிறந்த பள்ளிகளுக்கான தேர்வுகள் செய்யப்படுகின்றன.

எந்த வித ஒளிவு மறைவுமின்றி, மிகவும் வெளிப்படைத்தன்மையுடன், இதற்கான தேர்வுகள் நடைபெறுகின்றன.

### முன் மாதிரிப் பள்ளி!

இப்படித் தேர்வாகி கேடயங்களைப் பெற்றுள்ள 114 பள்ளிகளுக்கும், அவற்றின் தலைமை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு பள்ளி, சிறந்த பள்ளியாகத் தேர்வாகிட, அங்குள்ள மாணவர்கள் நன்றாகப் படித்தால் மட்டும் போதாது. அந்தப் பள்ளி மற்ற பள்ளிகளுக்கும் முன்மாதிரி பள்ளியாக இருக்க வேண்டும்.

அப்படி முன்மாதிரி பள்ளியாகத் திகழ்ந்து, கேடயங்களைப் பெற்றுள்ள அரசுப் பள்ளிகளைக் காணும் போது, உண்மையிலேயே பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

இந்தக் கேடயங்கள் வழங்கப்படுவதில், எனக்கு ஒரு வகையில், கூடுதல் மகிழ்ச்சி. ஏனென்றால், இந்தக் கேடயத்தைப் பெற, சம்பந்தப்பட்ட பள்ளியானது, விளையாட்டுத் துறை சார்ந்தும் சாதித்திருக்க வேண்டும்.

எனவே, இங்குக் கேடயம் வென்றுள்ள 114 பள்ளிகளில் இருந்தும், நிறைய விளையாட்டு வீரர்கள், தமிழ்நாட்டுக்குக் கிடைக்கவுள்ளார்கள். அதை எண்ணி, விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கல்வியாண்டில் கேடயம் பெறுகிற வாய்ப்பை இழந்த பள்ளிகளுக்கு ஒரு வேண்டுகோளையும் முன்வைக்க விரும்புகின்றேன்.

உங்கள் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில், விளையாட்டில் திறமையானவர்களைக் கண்டறிந்து, விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க செய்யுங்கள். அவர்களின் வெற்றி, நிச்சயம், உங்களுக்கும் அந்த வெற்றியை பெற்றுத்தரும்.

சிலநேரங்களில் பள்ளிக்கல்வித்துறை முன்னெடுக்கும் திட்டங்களைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கும். முக்கியமான விஷயம், இங்கு நிறைய ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் வந்திருக்கிறீர்கள்.

முக்கியமாக கணக்கு (Maths) மற்றும் அறிவியல் (Science) ஆசிரியர்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்களின் வகுப்புகளை சிறப்பாக எடுக்க P.E.T வகுப்பைக் கடன் வாங்காதீர்கள். முடிந்தால், உங்கள் வகுப்புகளை (Period) P.E.T ஆசிரியருக்கு வழங்கி குழந்தைகள் விளையாடுவதற்கான வாய்ப்பை அதிகம் வழங்குங்கள்.

Phonetic Lab, Foreign Tour என்று ஒரு பெற்றோரைப் போல் அப்பாவாக அம்மாவாக இருந்து தனியார் பள்ளிகளுக்கு இணையாகப் பல்வேறு பணிகளை நம்முடைய மாணவர்களுக்காகப் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களும் அந்த துறையைச் சேர்ந்தவர்களும் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

### அரசுப் பள்ளி - பெருமையின் அடையாளம்!

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் வரும் நான் முதல்வன் திட்டத்துக்கும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம், பள்ளிகளிலேயே தேர்வுகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளிகளிலேயே Career Guidance பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கல்வி என்பது வெறும் பாடப்புத்தகத்தில் மட்டும் இல்லை. புத்தகத்திற்கு வெளியேயும், நீங்கள் நிறைய படிப்பதற்கும் - கற்றுக் கொள்வதற்கும் இருக்கின்றன. அதற்கு உதாரணமாகத்தான், இங்கு 180 மாணவ - மாணவியர், ஓவியம் - கட்டுரை - பேச்சுப் போட்டிகளில் சாதித்து, இங்கே பரிசுகளை வாங்கியுள்ளீர்கள். உங்கள் திறமைக்கு என்னுடைய வாழ்த்துகள்.

வழக்கமாக உங்கள் அமைச்சர் ஒன்றைச் சொல்வார் - `அரசுப்பள்ளி என்பது வறுமையின் அடையாளம் இல்லை பெருமையின் அடையாளம்' என்பதுதான் அது. அதை நானும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

மாணவர்களாகிய உங்களை மட்டுமல்ல, உங்களின் பெற்றோர்களைப் பற்றியும் சிந்திக்கிற அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு நம் கழக அரசு. அதனால்தான் பள்ளிகளில், காலை சிற்றுண்டித் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

இந்தத் திட்டம், இப்போது ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தையே திரும்பி பார்க்க வைத்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் நம் பக்கத்து மாநிலம் தெலங்கானா மாநிலமும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.

பள்ளிக்கல்வித்துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்போடு செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் 31 ஆயிரம் பள்ளிகளில் 17 லட்சம் மாணவக் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

### அரசுப் பள்ளியில் படித்த விஞ்ஞானிகள்!

அண்மையில் கூட, சந்திரயான்3 நிலவுக்கு அனுப்பப்பட்டது. அதில் பணிபுரிந்த Project Director உட்படப் பல முக்கியமான விஞ்ஞானிகள், தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் படித்தவர்கள். அவர்களை எல்லாம் நேரில் அழைத்து, ஊக்கத் தொகையாக தலா 25 லட்சம் ரூபாயை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இதுபோன்று, அரசுப்பள்ளிகளில் படிக்கின்ற ஒவ்வொரு மாணவரும், மிகப்பெரிய சாதனையாளராக நீங்கள் அத்தனை பேரும் வர வேண்டும். அதற்கு, நம்முடைய கழக அரசும் முதலமைச்சர் அவர்களும் பள்ளிக் கல்வித்துறையும் என்றென்றும் உங்களுக்கு துணை நிற்கும்.

கேடயங்களைப் பெற்றுள்ள பள்ளிகளுக்கும் - பரிசுகளை வென்றுள்ள மாணவர்களுக்கும் மீண்டும் என் வாழ்த்துகள்.

இங்கே அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களும்,

நான், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் என இரண்டு அமைச்சர்கள் கலந்துகொண்டிருக்கிறோம். ஆனால், எங்களுக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு சிறு பொறாமை ஏற்படும்.

அறநிலைத்துறை அமைச்சர், அவர் கோயில் கோயிலாகச் சுற்றிக் கொண்டிருப்பார். நான் விளையாட்டுத்துறை அமைச்சர் என்கிற முறையில் ஸ்டேடியம், விளையாட்டுத் திடல் என சுற்றிக் கொண்டிருப்பேன். ஆனால்,

பள்ளிக் கல்வித் துறை அமைச்சரை பார்த்தீர்கள் என்றால், மாதம் ஒரு வெளிநாடு டூர் போய் விடுவார். நன்றாகப் படிக்கக் கூடிய குழந்தைகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டு விடுவார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு துபாய் போய்விட்டு வந்தார். இரண்டு மாதங்களுக்கு முன்பு சிங்கப்பூர், மலேசியா என்று போய் வந்தார். நேற்றுதான் ஜப்பானிலிருந்து வந்து, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார். அடுத்து எந்த நாட்டுக்குப் போக போகிறார் என்பது எனக்குத் தெரியாது.

நன்றாகப் படிக்கக்கூடிய சாதிக்கக்கூடிய மாணவர்களை அழைத்துக்கொண்டு, அவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக அவர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறார். அந்த மாணவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். முதலமைச்சர் அவர்கள் மாணவச் செல்வங்களை சந்திக்கும் போதெல்லாம் தொடர்ந்து, ஒன்றைச் சொல்லுவார். ` மாணவச் செல்வங்களாகிய நீங்கள் எதைப் பற்றியும் கவலைப் படாதீர்கள்... கல்வி ஒன்றுதான் உங்களிடமிருந்து பிரிக்க முடியாத பறிக்க முடியாத ஒரே சொத்து. என்றால் இந்த கல்வி மட்டும்தான். இந்தக் கல்வி உங்களுக்கு தாயாக, தந்தையாக அனைத்துமாக இருந்து உங்களைப் பாதுகாக்கும் என்று சொல்வார். எனவே, அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

மீண்டும் உங்களுக்கும் குழந்தைகளுக்கும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சருக்கும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கழக இளைஞரணி செயலாளரும் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 17ஆம் தேதி ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்து 2500 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கியும் இளைஞரணி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவும ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார். அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து ஈரோடு தெற்கு வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ் தலைமையில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் முன்னிலையில் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் வடக்கு, தெற்கு மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம் ஊராட்சி, அன்னலட்சுமி இராஜபாண்டியன் திருமண மண்டபத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக பயனாளிகளுக்கு உரிமைத் தொகையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தாயகத்தின் தேயிலை!

# இடம் பொருள் கலைஞர் 44

# தாயகத்தின் தேயிலை!

## மறுவாழ்வுத் திட்டம் மூலம் தொழில் வளர்ச்சி!








“தம்பி... டீ இன்னும் வரலை” என்பது இன்று பிரபலமாகிவிட்ட ஒரு திரைப்பட நகைச்சுவை வசனம். ஆங்கிலத்தில் ‘டீ’ என்று அழைக்கப்படும் தேநீரைத் தயாரிக்கப் பயன்படும் தேயிலைக்குப் பின்னுள்ள குருதி செறிந்த வரலாற்றை அறிய நேர்ந்தால், நாம் சுவைக்கும் ஒவ்வொரு மிடறு தேநீரையும் கொஞ்சம் விசும்பலுடன்தான் பருக நேரிடும்.

காபிக்கு அடுத்து இன்று உலகில் அதிகம் விரும்பப்படும் ஒரு பணப் பயிர், தேயிலை. 1800-களில்தான் இந்தியாவில் தேயிலை மூலம் தேநீர் தயாரித்துப் பருகும் வழக்கம், ஆங்கிலேயர்கள் வழியாக அறிமுகமானது. பிறகு 1815 வாக்கில், இலங்கையும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் வர, சில ஆண்டுகளில் தேயிலை அங்கும் அறிமுகமானது.

“1820-ஆம் ஆண்டு முதல் காபி தோட்டங்கள் உருவாக்கப்பட்டு, 1823-ஆம் ஆண்டு முதல் காபி உற்பத்தி தொடங்கியது. மதறாஸ் மாகாண அரசாங்கம், 1815-இல் தஞ்சாவூர் கலெக்டருக்கு, தஞ்சை சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து இலங்கைக்குத் தோட்டத் தொழிலாளர்களை அனுப்பக் கோரி ஒரு கடிதம் அனுப்பியது. கூலி அதிகம் வேண்டும் என்ற நிபந்தனையுடன் காபி தோட்டங்களில் வேலை செய்வதற்காக 150 தொழிலாளர்கள் 1828-இல் இலங்கை சென்றடைந்தனர்” என்று மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜெ.பால சுப்பிரமணியம் தன் கட்டுரை ஒன்றில் பதிவு செய்திருக்கிறார். ஆக, 1823-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் இலங்கையில் மலையகத் தோட்டப் பணிகளுக்காகப் புலம்பெயர்ந்திருக்கிறார்கள். அந்தப் புலப்பெயர்வின் 200-வது ஆண்டு இது!

### கண்ணியம் போற்றிய மறுவாழ்வு!

இங்கிருந்து தோட்ட வேலைகளுக்காக இலங்கை சென்ற தமிழர்கள, பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகினர். சமவெளிப் பகுதியில் மேற்கொள்ளும் விவசாயப் பணிகளைக் காட்டிலும், மலையகத் தோட்டங்களில் பணியாற்றுவது மிகவும் கடினமாக இருந்தது. அதனால், பலர் ஒப்பந்தங்களை மீறி தாயகம் திரும்பினர். அப்படி முயற்சி செய்து காவலர்களிடம் சிக்கிக் கொண்டவர்கள் மீது குற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு பயந்து பலர், ‘நம் தலைவிதி இதுதான்’ என்று மனதைத் தேற்றிக்கொண்டு இலங்கையிலேயே தங்கிவிட்டனர்.

இந்த நிலையில்தான், பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை விடுதலையடைந்த பிறகு, அங்கு தமிழர்கள் மீது சிறிய அளவில் இன ரீதியான தாக்குதல், கொஞ்சம் கொஞ்சமாகத் தலையெடுக்கத் தொடங்கின. அதைத் தொடர்ந்து, இந்திய அரசு இலங்கை அரசுடன் 1964-இல் ஏற்படுத்திக் கொண்ட சாஸ்திரி-சிறிமாவோ உடன்படிக்கையின்படி, இலங்கையிலிருந்து பல நூறு தமிழர்கள், தங்கள் தாயகமான தமிழ்நாட்டுக்குத் திரும்பினர்.

இந்த நிறுவனத்தில் ஏற்கப்பட்ட இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு,

- வாடகை இல்லா குடியிருப்புகள்
- குடிநீர் வசதிகள்
- இலவச மருத்துவ வசதிகள்
- குழந்தைக் காப்பகங்கள்
- ஆரம்பக் கல்வி
- ஊதியத்துடன் கூடிய பிரசவ கால விடுப்பு (84 நாட்கள்)
- ஒவ்வொரு 20 நாள் வேலைக்கும் 1 நாள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு
- ஆண்டுக்கு 14 நாட்கள் உடல் சுகவீன விடுப்புடன், 2/3 பாகம் ஊதியம்
- ஆண்டில் 9 நாட்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை விடுப்பு
- குளிர்காலப் போர்வைகள் அளிக்கப்படுதல்
- வேலை இடங்களில் இலவசத் தேநீர்
- பெண் மற்றும் ஆண் தொழிலாளர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு ஊக்கத் தொகை
- வருங்கால வைப்பு நிதி
- பணிக்கொடை
- தொழிலாளர் நஷ்ட ஈட்டுத் தொகை
- போனஸ்

உள்ளிட்ட நல்வாழ்வு வசதிகள் கலைஞர் ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்டன. இவற்றில் பல வசதிகள், இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன.




அவ்வாறு வந்தவர்களில் பலர், நீலகிரி மாவட்டத்தில்தான் அதிக அளவில் குடியேறினர். அதற்கு ஒரு காரணம், அந்த மாவட்டத்தில் தேயிலை பயிரிடப்பட்டு வந்ததால், அங்கு தாங்கள் பிழைக்க ஏதேனும் வழி கிடைக்கலாம் என்று அந்த மக்கள் எண்ணியிருக்கலாம்.

அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்களை கண்ணியமான ஒரு மறுவாழ்வுக்குத் தயார்படுத்த, 1968-இல் நம் கழக அரசால் தொடங்கப்பட்டதுதான் ‘தேயிலை வளர்ப்புப் பணித் திட்டம்’.

1968-இல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தார். ஆனால், அவர் புற்றுநோயால் பாதிக்கப் பட்டிருந்த காலம் அது. அப்போது அவர் சிகிச்சையில் இருந்தபோதெல்லாம், அவரது இடத்தில் பொறுப்பாக இருந்து அரசை நடத்தியது முத்தமிழறிஞர் கலைஞர்தான். அதன்படி, ‘தேயிலை வளர்ப்புப் பணித் திட்டம்’ கொண்டு வந்தது கலைஞர்தான். பிறகு 1976-இல், அந்தத் திட்டம், ‘தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்’ என்ற பெயரில் ஒரு நிறுவனமாக உருவாக்கப்பட்டது. ஆங்கிலத்தில் இது ‘டான் டீ’ என்று அழைக்கப்படுகிறது.

### பெண்களுக்கும் வேலை வாய்ப்பு

‘டான் டீ’ தொடங்கப்பட்டதிலிருந்து, இப்போது வரை சுமார் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. இன்று சுமார் 6,700 பேருக்கு நிரந்தர வேலையும், அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த இதர உறுப்பினர்கள் என சுமார் 4,500 பேருக்கு விளைச்சல் காலத்துக்கு ஏற்ப தற்காலிக வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் 50 சதவிகிதத்துக்கும் மேல் பெண் தொழிலாளர்கள் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இங்கு பணியாற்றும் பணியாளர் யாரேனும் மரணமடைந்துவிட்டால், கருணை அடிப்படையில் அவர்களின் பணி அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகிறது. 1989-91-ஆம் ஆண்டு காலத்தில், கலைஞரின் ஆட்சியின்போது, இப்படி ஒரு திட்டம் தமிழ்நாட்டில் வேறு எந்தத் தேயிலைத் தோட்ட நிறுவனத்திலும் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தற்சமயம், சுமார் 4,500 ஏக்கர் பரப்பளவில் தேயிலை பயிரிட்டு, அதை நிர்வகித்து வரும் இந்த ‘டான் டீ’ நிறுவனத்தின் தேயிலைத் தூளுக்கு உலகம் முழுவதும் சந்தை இருக்கிறது. நாட்டின் தேயிலை ஏற்றுமதியிலும் இந்த நிறுவனத்தின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தகுந்த ஒன்றாக உள்ளது. ஆக, ஒரு மறுவாழ்வுத் திட்டத்தை, தொழில் வளர்ச்சிக்கான திட்டமாகவும் சிந்தித்துச் செயல்படுத்தியதில் உள்ளது, நவீன தமிழ்நாட்டைக் கட்டமைத்த கலைஞரது தொலைநோக்கின் சிறப்பு!

...வலம் வருவோம்

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், 2008-ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று, ‘டான் டீ’ தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூ.338.23 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. அதன் பிறகு சுமார் 10 ஆண்டு காலம் அ.தி.மு.க. அரசு, பரிந்துரைக்கப்பட்ட ஊதியத்தை உயர்த்தாமல் விட்டுவிட்டு, 2019-ஆம் ஆண்டு நவம்பர் 28 அன்று ‘டான் டீ’ தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியத்தை அகவிலைப்படியுடன் சேர்த்து ரூ.350.73 ஆக, அதாவது, ரூ.12.50 மட்டுமே உயர்த்தி வழங்கியது.

2021-ஆம் ஆண்டு மே மாதம் நம் கழக அரசு பொறுப்பேற்றவுடன், இந்த ஆண்டு அந்தத் தொழிலாளர்களின் தினசரி சம்பளம் ரூ.438 ஆக உயர்த்தப்பட்டுள்ளதுடன், 20 சதவிகித போனஸும் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

## ‘தாடிக்காரன் பேத்தி’ – இசைக் காணொலி!

மானுட சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் வரை, தந்தை பெரியார் என்கிற ‘கருத்து நெருப்பை’ சுமந்து செல்ல தலைமுறைகள் பல உருவாகும். அந்த வகையில், தந்தை பெரியாரைப் பாடி மகிழ்கிறார் சிறுமி தனியாழ். சமீபத்தில், அவர் வெளியிட்டுள்ள ‘தாடிக்காரன் பேத்தி’ என்கிற பாடல் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பெரியாரை அறிமுகப்படுத்தி, அவர் வெளியிட்டுள்ள இந்த இசைக் காணொலி இளம் தலைமுறையினரிடம் பெரியாரைக் கொண்டு சேர்க்கும். பாடலின் பின்னணியில் ஒரு குழுவினரின் உழைப்பு இருந்தாலும், சிறுமி தனியாழ் உணர்வுப்பூர்வமாக பெரியாரை உள்வாங்கிப் பாடுவது நெருக்கமாக உணர வைக்கிறது.

தன் வாழ்நாள் முழுவதும் மானுட சமத்துவத்துக்காக நேர்மையுடனும் துணிச்சலுடனும், தன்னலம் பாராமல் எதிர்த்துப் போராடிய பெரியார், தலைமுறைகள் கடந்தும் ஈர்க்கப்படுகிறார் என்பதை ‘தாடிக்காரன் பேத்தி’யில் கண்டு ரசிக்கலாம்.

## ::ப்ளாஷ்பேக்



### பரிசாக சுவர் கடிகாரம்!

1995 -ஆம் ஆண்டு செப்டம்பர் 4 அன்று சேலம் மாவட்டத்தில், தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது. அன்றைக்கு சேலம் மத்திய மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், என்னால் இயன்ற அளவுக்கு நிதி வசூல் செய்து தலைவர் கலைஞர் அவர்களிடம் அளித்தேன். என் கழகப் பணியைப் பாராட்டும் விதமாக, சுவர் கடிகாரம் ஒன்றை அன்பளிப்பாக அதே மேடையில் தலைவர் கலைஞர் எனக்கு வழங்கினார். உடன் ஆற்காட்டார் அவர்களும், இன்றைய கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களும் இருந்தனர்.



கணேசன்

**-கொ.மு.கணேசன்,**
**முன்னாள் துணை அமைப்பாளர்,**
**கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, சேலம் மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தேவையற்ற செலவுகள்

**1958 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் தேதி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையைப் புறக்கணிப்பதாக அறிஞர் அண்ணா அறிவித்தார். "ஆளுநர் என்ற பதவியே தேவையற்றது, ஒழிக்கப்பட வேண்டியது, ஆளுநருக்காகவும் அவரது பரிவாரங்களுக்காகவும் ஆண்டுதோறும் செலவிடப்படும் பெரும் தொகையினால் எந்தவித உருப்படியான பலனும் இல்லை என்பதால், அவை அத்தனையும் வீண் செலவு. நாட்டின் இன்றைய பொருளாதார நிலையில் அவ்வளவு பெருந் தொகையைப் பாழாக்குவது காலத்திற்கு ஒவ்வாதது" என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 301




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131